**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure.)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.119/2022**

**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : கல்யாணி | Caste | : |
| Father 's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused present )

**04.03.2024**

**முதல் விசாரணை**

நான் போக்குவரத்து நகர் வலையங்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் மதுரை சரவணா ஜவுளிக்கடையில் அக் கவுண்ட்டட்டராக பணி செய்து வருகிறேன் கடந்த 21.04.2015 அன்று நான் வேலை முடித்து இரவு 8.30 மணியளவில் கடையில் இருந்து கிளம்பி எங்களது ஏறியா செல்லும் போது 9.30 மணி ஆகிவிட்டது. அப்போது போக்குவரத்து நகர் நுழைவில் முதல் பேருந்து நிறுத்தத்தில் எனது இருசக்கர வாகனத்தின் முன் புற சக்கரம் பஞ்சராகிவிட்டதால் நான் மெதுவாக சென்று கொண்டிருந்த போது எனக்கு பக்கவாட்டில் வந்த சிகப்பு கலர் இருசக்கர வாகனத்தில் வந்த இரு நபர்களும் கைலி அணிந்திருந்தார்கள். அதில் பின்னால் அமர்ந்திருந்தவர் நான் கழுத்தில் அணிந்திருந்த 2 பவுன் நகையை அத்துவிட்டார். நான் துரத்திக் கொண்டே சென்றேன். இருட்டாக இருந்ததால் அவர்களை என்னால் பிடிக்கமுடியவில்லை. நான் காவல் நிலையம் சென்று சம்பவம் பற்றி புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்தும் என்னுடையது தான். மேற்படி புகார் அ.சா.ஆ. 1 ஆகும். 6 மாதங்கள் கழித்து நீதிமன்றத்தில் மனு செய்து என்னிடம் பறிக்கப்பட்ட நகையை நான் திரும்ப பெற்றுக்கொண்டேன். என்னிடம் புகைப்படத்தில் காண்பிக்கப்படும் நகைதான் என்னிடம் பறிக்கப்பட்ட நகையாகும். அந்த நகை சா.பொ. 1 ஆகும். என்னிடம் ஆஜர் எதிரிகள் தான் சம்பவத்தின் போது நகையை பறித்தவர்கள் ஆவார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் கு.வி. இல்லை**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure.)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.119/2022**

**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : ராமதாஸ் | Caste | : |
| Father 's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused present )

**04.03.2024**

**முதல் விசாரணை**

நான் பெருங்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் 2 ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் ஒரு அத்தாட்சியில் உள்ள 2 வது கையெழுத்துக்கள் என்னுடையது தான். அதை காவல் நிலையத்தில் வைத்து போலிசார் கேட்டுக் கொண்டதற்கு இனங்க கையொப்பம் செய்தேன். அதில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. மேற்படி கையெழுத்துக்கள் மட்டும் அ.சா.ஆ.2 முதல் 4 ஆகும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் கு.வி:**

கடந்த 05.08.2015 அன்று காலை 8.05 மணிக்கு திருமங்கலம் மதுவிலக்கு அமல் பிரிவு காவல் ஆய்வாளர் பொறுப்பு பெருங்குடி காவல் நிலையம் இந்த வழக்கின 2 எதிரிகளையும் எனது மற்றும் சாட்சி கணேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் கைது செய்து விசாரித்த போது 2 எதிரிகளும் எவ்வித அச்சுறுத்தலும் இன்றி ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அதன் தொடர்ச்சியாக இந்த வழக்கு சொத்தினை போலிசார் கைப்பற்றி அதில் நாங்கள் இருவரும் கையெழுத்து இட்டோம் என போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் கு.வி. இல்லை**